# நடப்பு நிகழ்வுகள்- ஜூலை 21 - 2017

- மூத்த குடிமக்களுக்கு மத்திய அரசால் "பிரதான் மந்திரி வய வந்தன யோஜனா" **(Pradhan Mantri Vaya Vandana Yojana)** என்ற புதிய ஓய்வூதிய திட்டத்தை மத்திய அமைச்சர் அருண் ஜெட்லி புதுடில்லியில் தொடங்கி வைத்தார்.

- சமத்துவமின்மையை குறைப்பதற்கான உறுதிப்பாடு கொண்ட நாடுகள் அட்டவணையில் (**Countries For Commitment to Reducing Inequality Index**) 152 நாடுகள் பட்டியலில் இந்தியா 132 வது இடத்தை பெற்றுள்ளது. இந்தபட்டியலில் சுவீடன் நாடு முதலிடத்தை பெற்றுள்ளது. நைஜீரியா கடைசி நாடாக இடம் பிடித்துள்ளது.

- சிறந்த நிதி மேலாண்மைக்கான தேசிய விருதை என்.எல்.சி இந்தியா நிறுவனம் பெற்றது. மத்திய சுரங்க துறை இணை அமைச்சர் பியூஷ் கோயல் முன்னிலையில் மத்திய நிதித்துறை இணை அமைச்சர் அர்ஜுன்ராம் மெக்வால் விருதை வழங்கினார். என்.எல்.சி இந்தியா நிறுவனத்தின் நிதித்துறை இயக்குநர் ராக்கேஷ்குமார் விருதை பெற்றார்.

- இந்தியாவில் முதல்முறையாக மேற்குவங்காளத்தில் உள்ள இஸ்லாம்பூர் மாவட்டத்தின் மக்கள் நீதிமன்றத்தின் (**LOK ADALAT**) நீதிபதியாக திருநங்கை "ஜோயிதா மண்டல்" நியமிக்கப்பட்டுள்ளார். நாட்டிலேயே திருநங்கை நீதிபதியாகி இருப்பது இதுவே முதல்முறையாகும்.

- மத்திய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளராக இருந்த விகாஸ் ஸ்வரூப் கனடா நாட்டுக்கான இந்திய தூதுராக மாற்றப்பட்டதை தொடர்ந்து கடந்த பிப்ரவரி மாதம் கோபல் பக்லே அப்பொறுப்புக்கு நியமிக்கப்பட்டார். தற்போது இவர் பிரதமர் அலுவலகத்தில் இணைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். ஜெர்மனி நாட்டுக்கான இந்திய தூதுராக இருந்த ராவீஷ் குமார் புதிய செய்தித் தொடர்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

- இந்தியாவின் குஜராத் மாநிலத்தைச் சேர்ந்தவர் அர்பன் ஜோஷி. தற்போது இங்கிலாந்தில் வசித்துவரும் 22 வயதான ஜோஷி அந்நாட்டின் இளவயது மருத்துவராகி சாதனை படைத்துள்ளார்.



OXFORD IAS ACADEMY

- மத்திய அமைச்சர் நரேந்திர சிங் மற்றும் **ILO (International Labour Organization)** துணை இயக்குனர் திருமதி டெபோரா கிரின் பீல்ட் ஆகியோர் சாலை பராமரிப்பிற்கான "Aarambh" புதிய செல்போன் செயலியை அறிமுகப்படுத்தினர். இந்த செயலி கிராமப்புற சாலைகள் பராமரிப்பு மேலாண்மையை எளிதாக்கும்.

- 1969-ம் ஆண்டில் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசா அப்பல்லோ 11 என்ற விண்கலத்தில் நீல் அம்ஸ்ட்ராங் மற்றும் ஆல்ட்ரின் ஆகிய இருவரை நிலாவுக்கு அனுப்பியது. நீல் ஆம்ஸ்ட்ராங் நிலாவுக்கு சென்ற போது அங்குள்ள மண், மண் துகள்களை சேகரிக்க பயன்படுத்திய பை 1.8 மில்லியன் டாலர் (இந்திய மதிப்பில் சுமார் 11 கோடி) அளவுக்கு ஏலம் எடுக்கப்பட்டுள்ளது.

- அருணாச்சலப்பிரதேச மாநிலத்தின் உள்துறை செயலகமானது கம்பியில்லா தொழில்நுட்பத்தின் கீழ் முற்றிலுமாக மாற்றம் பெற்றுள்ள இந்தியாவின் முதல் உள்துறை செயலகமாகும். இதற்கான கணினி வலையமைப்பினை அம்மாநில முதல்வர் பேமா கந்து இடாநகரிலுள்ள மாநில உள்துறை செயலகத்தில் தொடங்கிவைத்தார்.

- மறைந்த முன்னால் ஜனாதிபதி அப்துல்கலாம் அவர்களின் இரண்டாவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு "கலாம் ஆன்தம்" என்ற வீடியோ பாடல் வெளியிடப்படுகிறது. இந்த பாடலை கவியரசு வைரமுத்து எழுதியுள்ளார். இசையமைப்பாளர் ஜிப்ரான் இசையில் வசந்த் இந்த வீடியோ ஆல்பத்தை இயக்கியுள்ளார்.

- ALPHABET நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவராக GOOGLE தலைமைச் செயல் அதிகாரி "சுந்தர் பிச்சை" நியமிக்கப்பட்டுள்ளார் என ஆல்ஃபபெட் நிறுவனத்தின் CEO லாரி பேஜ் தெரிவித்துள்ளார். ALPHABET நிறுவனம் கூகுளின் தாய் நிறுவனமாகும்.

- இங்கிலாந்து நாட்டின் உச்சநீதிமன்றத்தில் முதல் பெண் தலைவராக "பிரெஞ்சா மர்ஜோரி ஹேல்" (Brenda Marjorie Hale) நியமிக்கப்பட்டுள்ளார்.

OXFORD IAS ACADEMY